

## The Good Shepherd

## நல்ல மேய்ப்பன் யோவான் 10 : 11

மேய்ப்பர்கள் ஆடுகளை ஜாக்கிரதையாய் அக்கரைக் கொண்டு கவனிக்கிறார்கள். குட்டி ஆடுகள் எல்லாம் ஆட்டுக்குட்டிகள் என்று அழைக்கப்படுகின்றன. மேய்ப்பர்கள் எல்லா ஆடுகளையும் நேசிக்கிறவர்களாகவும், விஷேசித்த வண்ணமாக ஆட்டுக்குட்டிகளிடத்தில் அதிக அன்புள்ளவர்களாகவும் இருக்கிறார்கள்.

ஏனெனில் ஆடுகள் அவைகளுக்காக கவனம் எடுத்து கொள்வதில்லை, ஜாக்கிரதையாய் இருப்பதில்லை, மேய்ப்பர்கள் அவைகளுடனே தங்கியிருக்கிறார்கள். ஒரு சில நேரங்களில் காட்டில் உள்ள கொடிய மிருகங்கள் அவைகளை தாக்கி காயப்படுத்த முயற்சிக்கும் ஆனால் மேய்ப்பர்கள் அவைகளின் பிடியிலிருந்து அவைகளை பாதுகாத்து அவனுடைய அந்த ஆடுகளுக்காக சாகவும் விருப்பமுள்ளவராயிருக்கிறார்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்முடைய நல்ல மேய்ப்பராயிருக்கிறார். நம் எல்லோரையும் அவர் நேசிக்கிறார், அன்பு கூறுகிறார்.

அவர் நம்மீது எவ்வளவு அன்பு வைத்திரக்கிறாரென்பதை அவர் நம்முடைய பாவங்களுக்காக சிலுவையில் மரித்ததின் மூலம் நமக்கு காண்பித்தார். அவர் நம்மை இரட்சித்தார். ஆகவே நாம் பரலோக இராஜ்ஜியம் போக முடியும். நல்ல மேய்ப்பரின் பிறந்த நாளை குதூகலத்தடன் கொண்டாடுகிற நேரமாகவும், வருஷமாகவும் இந்த தருணம் இருக்கிறது. குழந்தை இயேசு நம்முடைய நல்ல மேய்ப்பராய் பிறந்திருக்கிறார் என்பதற்காக நாம் எல்லோரும் குதூகலித்து சந்தோஷமடைவோம்.

## ஜெபம்

அன்புள்ள இயேசுவே, நீர் எங்களை நேசிக்கிறீர் என்பதை நாங்கள் அறிந்து இருக்கிறோம். எல்லா காயத்திற்கும், தீங்கிற்கும் தயவாய் எங்களை காத்து பாதுகாத்தருளும். நாங்கள் தவறு செய்யும் போது தயவாய் எங்களை மன்னித்து பரலோகத்திற்கு உம்மோடே கூட எங்களையும் எடுத்துக் கொள்ளும். ஆமென்.

## வளர்ந்த பிள்ளைகளுக்குரிய மனப்பாட வசனம் – யோவான் 10 : 11

நானே நல்ல மேய்ப்பன் : நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான்.